செ.வெ.எண்: 477 நாள்: 31.07.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணிலில் கலந்து கொள்ளாத ஓய்வூதியர்கள் 15.08.2019 க்குள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணிலில் கலந்து கொள்ளாத ஓய்வூதியர்கள் 15.08.2019 க்குள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவூலத்தின் வழியாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் தாங்கள் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தில் ஏப்ரல் 2019 முதல் நடைபெற்று வருகிறது. இது நாள் வரை நேர்காணலில் கலந்து கொள்ளாத ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதிய புத்தகம், ஆதார் அட்டை நகல் மற்றும் குடும்ப அட்டை நகல் (Ration card) ஆகியவற்றை சமர்பிக்காதவர்கள் தற்போது அலுவலக வேலை நாட்களில் 15.08.2019 க்குள் மேற்கண்ட ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் அடையாள அட்டை விண்ணப்பங்கள் கருவூலத்தில் சமர்பிக்காதவர்கள் உடன் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், நேர்காணலில் கலந்து கொள்ளாத ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ஆகஸ்ட் 2019 முதல் நிறுதப்பட்டு அவர்களின் வங்கி கணக்கில் உள்ள இருப்பு தொகை திரும்ப பெறப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும் எனவும், மேலும் காலமான ஓய்வூதியர்களின் இறப்பு செய்தியை கருவூலத்தில்

தெரியப்படுத்துமாறும் அவ்வாறு தெரியப்படுத்தாமல் அவர்களின் வங்கிகணக்கில் உள்ள ஓய்வூதியத்தை சட்டத்திற்கு புறம்பாக எடுத்து பயன்படுத்துவோர் மீது சட்டரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட கருவூல அலுவலர் திரு.மூக்கையா அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**